# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி டி.ஏ.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

சாத்திரம் என்பது ஒரு கடலானால் அதில் மூழ்கி முத்து எடுப்பதில் நம் பூர்வாச்சார்யர்கள் வல்லவர்கள். அல்ப ஸாரமான விஷயங்களை விட்டுவிட்டு சாரதமமான ரத்தினங்களை எடுத்துக் கொடுப்பதில் கை தேர்ந்தவர்கள். கிருஷ்ணாவதாரம் என்ற சாகரத்தில் மூழ்கினார்கள். அதிலிருந்து பகவத் கீதையைக் கொணர்ந்து அதன் 18வது அத்தியாயத்தில் உள்ள சரம சுலோகத்தை நமக்கு இனம் காட்டினார்கள். ராமாவதாரம் என்ற மஹா சமுத்திரத்தில் மூழ்கினார்கள். அபயப்ரதானம் என்ற யுத்த காண்டப்பகுதியில் உள்ள இரண்டு சரம சுலோகங்களை நமக்கு அடையாளம் காட்டினார்கள். இந்த இரண்டு அவதாரங்களில் பகவான் நமக்கு வழங்கிய சத்திய வாக்குறுதிகள் அவை. அவனை நம்பி உய்வு பெறுவதற்கு உரிய எளிய ஏணிகள் அவை. மற்ற எல்லா சுலோகங்களைப் போலத்தான் இவையும் தோற்றமளிக்கின்றன. ஆனால் அவற்றின் கனத்தையும், ஸாரத்தையும் பூர்வர்கள் பார்த்த மாத்திரத்திலே புரிந்து கொண்டார்கள். காக்கைக் குஞ்சுகளுக்கு மத்தியில் உள்ள குயில் குஞ்சு போல் இந்த சுலோகங்கள் பொருளால் மற்றும் பயனால் வேறுபட்டவை என்று பிரித்தெடுத்தார்கள். இவற்றுக்கென்று பெரிய வியாக்யானங்கள் உண்டு.

“சர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம் த்வா சர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:” – இது க்ருஷ்ணாவதார சரம ஸ்லோகம். “மற்ற நெறிகளைக் கைவிட்டு என்னை மட்டும் சரணமடை! உன்னைச்சகல பாபங்களிலிருந்தும் விடுவிப்பேன். கவலைப் படாதே” – என்பது பொருள்.

“மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந, தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம்” – இது ராமாவதார சரம சுலோகங்களில் ஒன்று. “நண்பன் என்ற பாவனையோடு வந்தடைந்த இவனை ஒருபடியாலும் கைவிடமாட்டேன். இவனிடம் குற்றங்கள் இருந்தாலும் இருக்கட்டுமே! இவனை ஏற்றுக் கொள்வது சான்றோர்களுக்கு இகழத்தக்கதன்று” இதுதான் பொருள்.

அடுத்த சரமஸ்லோகம், “ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே, அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம” இதன் பொருள், “ஒருமுறை சரணடைந்தாலும் உனக்கு நான் தாசன் என்று யாசித்தாலும் அவனைச் சகல பிராணிகளிடத்திலிருந்தும் பயமில்லா வாழ்வை அடையும்படிச் செய்கிறேன்.

இதுஎனக்கு விடமுடியாத கொள்கை" என்பதாகும்.

க்ருஷ்ணாவதார சரமச்லோகப் பொருளும், ராமாவதார சரமச்லோகப் பொருளும், ஒரு வண்டியின் இருமாடுகள் போல ஒன்றுக் கொன்று ஈடுகொடுத்து நமக்கு ஒரு தெளிவைக் கொடுக்கின்றன. ஒன்றில் சொல்லப்பட்டது இன்னொன்றில் சொல்லப் படுகிறது. இந்த இரண்டின் ஒப்பு ஆய்வு நிச்சயம் சுவைமிக்கதாக இருக்கும்.

கண்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் நட்பு உண்டு, மைத்துன உறவு முறை உண்டு. ராமனுக்கும், விபீஷணனுக்கும் அப்படியேதும் இல்லை. ஜாதியால் வர்ணத்தால் இருவரும் வெகு தூரம் தள்ளி இருப்பவர்கள். அர்ஜுனன் போன்ற நெருக்கமானவர்களுக்குத்தான் பகவான் அருள்வானோ என்ற ஐயத்தை ராமாவதாரம் போக்கி விடுகிறது. விபீஷணன், அரக்கன், புலால் உண்பவன், எதிரியின் தம்பி, மோட்ச சாஸ்திரங்கள் பற்றிய அறிவில்லாதவன். அர்ஜுனனைப் போல் கீதோபதேசம் பெறாதவன். ராவணனுக்கு அஞ்சி சிம்மாசனத்துக்கு ஆசைப்பட்டுவந்த சுயநலக்காரன். ஏறக்குறைய நம்மைப் போன்றவன். உலகியல் வரங்களைக் கேட்டு பெருமாளைச் சரணடையும் நம் குணமும் அவன் குணமும் ஒன்று.

ஞானவிஷயங்களில் பல ஐயங்களைக் கேட்டு ஆத்மஞானம் பற்றிய சர்ச்சைகளில் பகவானோடு சம்பாஷித்து பகவானால் மோக்ஷயிஷ்யாமி (முக்தியளிப்பேன்) என்று வரம் அருளப்பட்டவன் அர்ஜுனன். இங்கே க்ருஷ்ணாவதார சரமச்லோகம், வைகுண்ட ப்ராப்தியை சூசிப்பிக்கிறது. ராமாவதார சரமச்லோகம், உலகியல் வரங்களை அடைவதைக் குறிக்கிறது. மோக்ஷத்துக்காகச் சரணடைந்த ததிபாண்டனும், சேலைக்காகச் சரணடைந்த த்ரௌபதியும் ப்ரபத்தியையே கைக் கொண்டார்கள். பகவான் ஆன்மீக மற்றும் உலகியல் பலன்கள் இரண்டையுமே தருகிறவன் என்பது இங்கே புலனாகிறது.

அடுத்து க்ருஷ்ணாவதாரத்தில் மற்ற அறநெறிகளை விட்டுவிடு (ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய) என்றான் கண்ணன். ராமாவதாரத்தில் குற்றங்கள் இருந்தாலும் சரணடையலாம் (தோஷோ யத்யபி) என்றார் பகவான். உடையவருக்கு ஒரு அன்பர் ஸ்ரீராமர் விக்ரஹத்தைக் காணிக்கையாக சமர்ப்பித்த போது "தேவையிடாதவர் வந்தாரோ" என்று உடையவர் கூறியதான வரலாறு உண்டு. தேவையிடாதவர் என்றால் மற்ற அறநெறிகளைக் கைவிடுதல் என்பது போன்ற நிர்பந்தங்கள் எதுவும் சொல்லாமல் குற்றங்களோடு சரணடையலாம் என்று ராமன் அனுமதித்ததைக் குறிக்கிறது. இங்கே தெளிந்த ஞானி, இலக்கணப்படி பிரபத்தி செய்வதும், அறிவில்லாத பாமரன், பதட்டத்தில் பிரபத்தி செய்வதும் இரண்டுமே பகவானுக்கு சம்மதம் என்று காண்கிறோம்.

கண்ணன் நாடாளும் வேந்தன். ராமனோ நாட்டை விட்டுத் துரத்தப் பட்டவன். க்ருஷ்ணன் மனைவியைப்பிரிதல் என்ற துயர் அனுபவிக்காதவன். ராமன் சீதையைப் பிரிந்து அழுது கொண்டிருப்பவன். யாதவச் செல்வன், தான் பரமாத்மா என்று அடிக்கடி காட்டிக் கொள்ளுபவன். சக்ரவர்த்தி திருமகனோ நான் சாதாரணமனிதன் (ஆத்மாநம்

மானுஷம் மன்யே) என்று சொல்லிக் கொள்பவன். கண்ணனை அபயம் தரலாகாது என்று சொல்லுவார் யாருமே இல்லை. ராமனை வானர முதலிகள் அபயம் தரலாகாது என்று தடுத்துக் கொண்டிருந்தார்கள். கண்ணனைத் தனக்கு தொண்டு செய்யும் சாரதி என்று அர்ஜுனன் நினைத்தான். அவனை பரமாத்மாவாக அவன் உணர்ந்தது பின்னால் தான். ஆனால் விபீஷணன் ராமனை என்றுமே தன் வணக்கத்திற்குரிய பெருந்தகையாகவே எண்ணியிருந்தான்.

இப்படி இரு அவதாரங்களிலும் வேறுபாடுகள் காணப்பட்டாலும் தன்னைச் சரணடைந்தவர்களைக் காக்கும் விஷயத்தில் பகவானுடைய உறுதிப்பாடு தெளிவாகவே புலப்படுகிறது. "மாசுச:" (கவலைப்படாதே) என்றான் கண்ணன். "ஏதத் வ்ரதம் மம" (இது என்னுடைய உறுதியான சங்கல்பம்) என்றான் ராமன். கண்ணனிடமும் ராமனிடமும் முறையிடுவதற்காகச் செல்லும் பக்தர்கள் இந்தச் சரமச்லோகங்களையும் அவற்றின் பொருளையும் நன்குணர்ந்து இவற்றை எம்பெருமானிடம் சொல்லிக் காட்டியோ அல்லது இவற்றின் பொருளை மனதில் நிறுத்தி ப்ரபத்தி செய்தாலோ சத்ய சந்தனான பகவான் கட்டாயம் அருள்வான் என்று உணர்ந்துதான் நம் பூர்வர்கள் இவற்றை வியாக்யானங்கள் மூலமாக நமக்கு விளக்கி விட்டுப் போனார்கள். இப்படிப்பட்ட தெய்வீக சாஹித்யங்களைக் கற்பதும், கற்பிப்பதும் நம் அனைவர்க்கும் கடமை என்பதை உணராமல் வெறும் பொழுது போக்குப் பத்ரிகைகளையே படிப்பதில் காலம் கழிக்கும் நாம் எவ்வளவு பெரிய தவறு செய்கிறோம், எப்பேர்ப்பட்ட பேற்றினை இழக்கிறோம்.